Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.295 /2019 Date: 18.12.2025
Deposition of witness for prosecution: PW 3 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | வானதி | Village | வாலிபாறை |
| Father/ Husband Name | பிரகாஷ் | Taluk | ஆண்டிபட்டி |
| Age | 35 /2025 | Calling | - |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 18.12.2025 TIME 01.10 **PM**

1–வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

1–வது எதிரி எனது கணவர். 2, 3 எதிரிகள் எனது மாமனார், மாமியார். 4–வது எதிரி 1–வது எதிரியின் சகோதரர். எனக்கும், 1–வது எதிரிக்கும் கடந்த 29.06.2012–ம் திருமணம் இருவீட்டார் சம்மத்துடன், கம்பம் ராமத்தேவர் திருமண மண்டபத்தில திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது எனது பெற்றோர் எனக்கு 20 பவுன் நகைகள் மற்றும் ரூ.4 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள். திருமணம் முடிந்து எதிரிகளுடன் நான் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தேன். திருமணம் முடிந்து 4 மாதம் கழித்து, 4–வது எதிரிக்கு கிராம நிர்வாக அலுவலர் வேலை வாங்க வேண்டும் என எதிரிகள் எனது பெற்றேர் எனக்கு கொடுத்த 20 பவுன் நகைகளை கேட்டார்கள். நான் தர மறுத்ததால் என்னை கொன்றுவிடுவேன் என மிரட்டினார்கள். மேலும் எனது நகைகளை எதிரிகள் அடகு வைத்துவிட்டார்கள். நான் 4 மாதம் கருவுற்ற நேரத்தில் என்னை எனது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். 9–வது மாதம் கர்ப்பிணியாக இருந்த போது நான், எனது அம்மா மற்றும் உறவினர்கள் எதிரிகளின் வீட்டிற்கு சென்று வளைகாப்பு நடத்துவது குறித்து கேட்டட போது, 1–வது எதிரி உனக்கு வளைகாப்பு நடத்த முடியாது என சொல்லி என் தலைமுடியை பிடித்து இழுத்து, கீழே தள்ளிவிட்டு செம்பால் வயிற்றில் எறிந்தார், 26.05.2016–ம் தேதி எனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்து 5– மாதம் கழித்து என்னையும், எனது குழந்தையையும் எதிரிகள் அவர்களது வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். அங்கு சென்ற பின்பு வீட்டு செலவுக்காக பணம் எனது கணவரிடம் கேட்டதற்கு அவர் என்னால் தர முடியாது எனது அப்பா வீட்டில் இருந்து வாங்கி வா, மேலும் எனது மாமனார்,மாமியார் என்னை பார்த்து என்னை வேலைக்காரியாகவும், சாணி அள்ளுவதற்காகவும் தான் திருமணம் செய்து கூட்டி வந்தோம் என கூறினார்கள். நல்லமுறையில் எனக்கு சாப்பாடு, உடையும் அளிக்கவில்லை. நான் இவ்வாறு துன்புறுத்தப்பட்டதால் 28.06.2016–ம் தேதி நான் சாவதற்காக மருந்தை குடித்துவிட்டேன். என்னை உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில்

சிகிச்சைக்கு சேர்த்தார்கள். தகவல் தெரிந்து எனது பெற்றோரும் வந்துவிட்டார்கள். மேல் சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சிகிச்சையில் இருக்கும் போது எனது கணவர் மற்றும் கணவரின் குடும்பத்தார்கள் என்னை பார்க்க வரவில்லை. நான் எனது கணவருக்கு போன் செய்து ரூ.2000 செலவுக்கு வேண்டும் என கேட்டதற்கு எனது கணவர் பணமும் தரமாட்டேன், உன்னுடன் சேர்ந்து வாழவும்மாட்டேன் என கூறிவிட்டார். எனவே எனது அப்பா தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்து அதன் பெயரில் உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அங்கே வந்த எதிரிகள் எனது 20 சவரன் நகைகளில், 7 சவரன் நகைகள் கொடுத்தார்கள் மீதமுள்ள 13 சவரன் நகைகைய கேட்டதற்கு விவாகரத்து பத்திரத்தில் கையொப்பம் செய்தால் தான் மீதமுள்ள நகையை தருவேன் என எனது கணவர் கூறிவிட்டார். அவர்கள் மீது நடடிவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். 4–வது எதிரி தற்போது கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1–வது எதிரி ஆஜராகியும், குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.